## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of Judicial Magistrate, Chengam.

CC No. 163/2022

Deposition of Witness for : Pw-1

Name (திரு/திருமதி.) : செந்தில்குமார்

Father's Name/ Husband's Name : ராமலிங்கம்

Village & Taluk : தட்ச நாராயணன் கொட்டா

Caste : Calling : விவசாயம்

Religion : Age : 30

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15-05-2023.

எதிரிகள் 1 முதல் 4 ஆஜர் .

**முதல் விசாரணை-**

நான் தற்போது தட்ச நாராயணன் கொட்டா கிராமத்தில் வசிக்கிறேன். எம்.எஸ்.சி பி எட் படித்துவிட்டு வீட்டில் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை எனக்கு தெரியும். எனக்கும் எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்பந்தமாக தகராறு ஏற்பட்டு விரோதம் உள்ளது. கடந்த 23.12.2021 அன்று மதியம் சுமார் 2.00 மணியளவில் நான் டிராக்டரின் மூலம் நிலத்தை உழுதுக்கொண்டு இருந்தபோது ஆஜர் எதிரிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை அங்கு வந்து என்னை பார்த்து தெவிடியா பையா , பொரம்போக்கு என்று அசிங்கமான வார்த்தைகளால் என்னை திட்டினார்கள். அப்போது 3ம் எதிரி அருள் என்பவர் நான் அணிந்து இருந்த டீ சார்ட்டை பிடித்து இழுத்து கிழித்தும் ,இரும்பு ராடால் வலது பக்க இடுப்பில் அடித்துவிட்டார். 3ம் எதிரி என்னை அடித்த இரும்பு கம்பியை பார்த்தால் அடையாளம் காட்டி சொல்ல முடியும். தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் இரும்பு கம்பியால் தான் 3ம் எதிரி என்னை அடித்தார். **மேற்படி கம்பி அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

1ம் எதிரி ராஜவேல், 2ம் எதிரி சிவசக்தி ஆகியோர் கட்டையால் என் வலது பக்க முழங்கை முட்டியிலும் மற்றும் இடது பக்க முழங்கை முட்டியிலும் அடித்துவிட்டார்கள். 2ம் எதிரி என்னை அடித்த கட்டையை பார்த்தால் அடையாளம் காட்டி சொல்ல முடியும். தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் மூங்கில் கொம்பினால் தான் 2ம் எதிரி என்னை அடித்தார். **மேற்படி மூங்கில் கொம்பு அ.சா.பொ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

1ம் எதிரி ராஜவேல் என்பவர் கை மற்றும் கல்லால் என் மார்பிலும் கை மீதும் அடித்துவிட்டார். 1ம் எதிரி என்னை அடித்த 2 கற்களை பார்த்தால் அடையாளம் காட்டி சொல்ல முடியும். தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் 2 கற்களினால் தான் 1ம் எதிரி என்னை அடித்தார். **மேற்படி 2 கற்கள் அ.சா.பொ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேலும் 3ம் எதிரி அருள் என்பவர் எனது செல்போனை பிடுங்கி தரையில் போட்டு உடைத்துவிட்டார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் Intex black color கைப்பேசி என்னுடையது தான் அதனை தான் 3ம் எதிரி என்னிடம் இருந்து பிடுங்கி தரையில் போட்டு உடைத்துவிட்டார். **மேற்படி Intex black color கைப்பேசி அ.சா.பொ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

என்னுடைய இருசக்கர வாகனத்தினை 2 , 3 எதிரிகள் இரும்பு ராடாலும், கட்டையாலும் அடித்து உடைத்தார்கள். அதில் எனது இருசக்கர வாகனத்தின் வலது கைப்பிடி, முகப்பு விளக்கு , பிரேக், சைடு இன்டிகேட்டர் ஆகியவைகள் உடைந்துவிட்டது. என்னுடைய இருசக்கர வாகனத்தை நான் காவலர்களிடம் ஒப்படைத்து பின்னர் நீதிமன்றத்தில் ஒப்படைத்த பின்பு மனு தாக்கல் செய்து என் இடைக்கால பொறுப்பில் பெற்றுசென்றுவிட்டேன். மேற்படி இருசக்கர வாகனத்தை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டி சொல்ல முடியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள இருசக்கர வாகனம் என்னுடையது தான். **மேற்படி புகைப்படங்கள் ( 4 எண்ணிக்கை ) அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

காயமடைந்த நான் செங்கம் அரசு ம.ம சிகிச்சைக்காக சேர்ந்தேன். பின்னர் மேல்சிகிச்சைக்காக தி.மலை அரசு ம.ம சேர்ந்தேன். அங்கு ஒருவார காலம் சிகிச்சை பெற்றேன். நான் சிகிச்சை பெற்று டிஸ்சார்ஜ் ஆகிய பின்னர் செங்கம் கா.நி ஆஜராகி எதிரிகள் மீது நடவக்கை எடுக்க புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். புகார் மனு நான் கொடுத்தது தான். **மேற்படி புகார் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி-**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் எனது நிலத்திற்கு பக்கத்து நிலத்துகாரர்கள் ஆவர். நிலம் சம்பந்தமாக எங்களுக்கு இடையே முன்விரோதம் உள்ளது. என்னுடைய வீடு தட்ச நாராயண கொட்டாயில் உள்ளது. எங்களுடைய நிலம் முறையாறு டோல்கேட் அமைய இருக்கும் இடத்திற்கு அருகில் அமைந்துள்ளது. தி.மலை- செங்கம் தார்சாலையை ஒட்டி எங்களது நிலம்

அமைந்துள்ளது என்றாலும் தார் சாலைக்கு தென்புறமாக உள்ளது என்றாலும் சரிதான். எங்களது நிலத்திற்கு ஒட்டியவாறு பச்சையப்பன் என்பவரின் நிலம் உள்ளது. ஆஜா் எதிரிகளில் யாரும் பச்சையப்பன் இல்லை. பச்சையப்பன் நிலத்தை ஒட்டி லோகநாதன் என்பவரின் இடம் அமைந்துள்ளது. ஆஜா் எதிரிகளில் யாரும் லோகநாதன் இல்லை. எங்களது நிலத்தில் மூன்றாவதாக அமைந்துள்ள நிலம் வேல்முருகன் மற்றும் ராஜவேல் ஆகியோா் நிலங்களாகும். மேற்குறிப்பிட்ட ராஜவேல் மற்றும் வேல்முருகன் ஆகியோா்களின் நிலம் எங்களது நிலத்தில் இருந்து 3 நபா்களின் நிலத்திற்கு அப்பால் அமைந்துள்ளபோது எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே என்ன பிரச்சனை என்றால் ராமகிருஷ்ணன் மற்றும் கேசவன் என்பவர்களின் நிலம் எங்களது நிலத்தை ஒட்டி அமைந்துள்ளது அவா்கள் நிலம் சம்பந்தமாக பிரச்சனை செய்யும் போது எதிரிகளும் அவா்களுடன் வந்து பிரச்சனை செய்தாா்கள். எங்களுக்கும் ராமகிருஷ்ணன் என்பவருக்கும் ஏற்பட்ட நிலம் சம்பந்தமான தகராறில் 1ம் எதிரி ராஜவேல் என்பவரின் மனைவி ஜானகி என்பவா் இடையே வந்தபோது அவரை கல்லாலும் கொம்பாலும் நானும் எனது தந்தையும் தாக்கி அதன் பேரில் வழக்கு பதியப்பட்டு தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிரியின் மனைவியை நானும் எனது தந்தையும் தாக்கியது குறித்து 4 எதிரிகளும் எங்களிடம் வந்து கேட்டாா்களே தவிர ஆஜா் எதிரிகள் என்னை ஆபாசமாக பேசி அடிக்கவில்லை என்றாலும் எந்த ஆயுதத்தையும் கொண்டு அடிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

2. செங்கம் - தி.மலை தேசிய நெடுஞ்சாலையில் எங்களது இடத்திற்கு அருகே டோல் கேட் அமைக்க வேண்டி சாலையை விரிவு படுத்தும் பணி நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். எங்களது நிலத்தை ஒட்டி தார் சாலையை விரிவு படுத்த 2 அடி பள்ளம் எடுக்கப்பட்டு அதில் ஜல்லி கற்கள் நிரப்பட்டுள்ளது என்றால் சரிதான். நெடுஞ்சாலைக்கும் எங்களது நிலத்திற்கும் இடையே கல் நடப்பட்டுள்ளது என்றால் கற்கள் நடப்படவில்லை. 23.12.2021 அன்று சம்பவம் நடைபெற்றது. நான் 1ம் எதிரியின் மனைவியை தாக்கி அதில் எனது பெயரில் புகாா் பதியப்பட்டுள்ளது என்றாலும் அதில் இருந்து தப்பிக்க வேண்டி எதிரிகள் மீது பொய் புகாா் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

3. காயம்பட்ட நான் முதலில் செங்கம் அரசு ம.ம சிகிச்சை பெற்றுக்கொண்டேன். அதன்பின்னா் தி.மலை அரசு ம.ம சிகிச்சை பெற்றுக்கொண்டேன். நான் அரசு ம.ம இருந்து பொய்யான சான்று பெறுவதற்காகவே அங்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. காவலா்கள் என்னை மருத்துவமனையில் இருந்தபோது விசாரித்து வாக்குமூலம் பெற்று சென்றாா்கள்.காயம்பட்ட அன்றே காவலா்கள் வாக்குமூலம் பெற்றாா்கள். சம்பவத்தன்று இரவு செங்கம் அரசு ம.ம இருந்து தி.மலை அரசு ம.ம சிகிச்சைக்காக சென்றேன். எதிரிகள் என்னை அடிக்காததால் தான் காலவா்கள்

என்னிடம் இருந்து புகார் வாக்குமூலம் பெற்று செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தி.மலை அரசு ம.ம சிகிச்சைக்காக சேர்ந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மருத்துவ சான்றை கா.நி எடுத்துச்சென்று அதனை ஆதாரமாக கொண்டும் எனது செல்வாக்கை பயன்படுத்தியும் எதிரிகள் மீது பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. எனக்கு டிராக்டர் ஓட்ட தெரியாது. இருசக்கர வாகனம் ஓட்ட தெரியும். நான் எனது வீட்டில் இருந்து இருசக்கர வாகனத்தில் நிலத்திற்கு செல்லும்போது நான் அதிவேகமாக வாகனத்தை ஓட்டி எங்கள் நிலத்திற்கு அருகே எடுக்கப்பட்ட பள்ளத்தில் நானாக விழுந்து அதில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் எனது வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டது என்றாலும் அப்போது தான் எனது கைப்பேசி கீழே விழுந்துவிட்டது என்றாலும் எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றாலும் சரியல்ல சம்பவத்தின் போது எங்களது நிலத்திற்கு அருகே நெடுஞ்சாலை துறையால் பள்ளம் எதுவும் எடுக்கப்படவில்லை. நீங்கள் சொல்வது போல் ஏற்பட்டால் தலை மற்றும் இதர பாககங்களில் காயம் ஏற்படும் ஆனால் எனக்கு அவ்வாறான காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. எதிரிகள் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்யவேண்டி பொய்யான சான்று பொருட்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவற்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை காவலர்கள் விசாரித்து எதிரிகள் பயன்படுத்திய கற்களை எடுத்து வந்து நீதிமன்றத்தில் ஒப்படைத்தார்கள்.

5. எதிரிகள் இரும்பு கம்பி மற்றும் முங்கில் கொம்பால் என்னை தாக்கவில்லை என்றாலும் என் வீட்டில் இருந்த இரும்பு கம்பி மற்றும் முங்கில் கொம்பை காவலர்களிடம் கொடுத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**ஒம்/-(பி.வித்யா)**
**நீதித்துறை நடுவர், செங்கம்.**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Chengam.**

CC No. 163/2022

Deposition of Witness for : Pw-2

Name (திரு/திருமதி.) : ராமலிங்கம்

Father's Name/ Husband's Name : நாராயணசாமி

Village & Taluk : தட்ச நாராயணன் கொட்டா

Caste : Calling : விவசாயம்

Religion : Age : 58

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15-05-2023.

எதிரிகள் 1 முதல் 4 ஆஜர் .

**முதல் விசாரணை-**

நான் தற்போது தட்ச நாராயணன் கொட்டா கிராமத்தில் வசிக்கிறேன். விவசாயம் செய்கிறேன். அசா1 செந்தில் குமார் என் மகன் ஆவார். ஆஜர் எதிரிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை எனக்கு தெரியும். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்பந்தமாக தகராறு ஏற்பட்டு விரோதம் உள்ளது. கடந்த 23/12/2021 அன்று பகல் 2.00 மணியளவில் நானும் என்னுடைய மகன் செந்தில் குமாரும் டிராக்டரை வைத்து எங்களுடைய நிலத்தை உழுதுக்கொண்டு இருந்தோம். நான் 20 அடி துாரத்தில் நின்று டிராக்டர் ஏர் உழுவதை பார்த்துக்கொண்டு இருந்தேன். என்னுடைய மகனும் சுமார் 20 அடி துாரத்தில் நின்று டிராக்டர் ஏர் உழுவதை பார்த்துக்கொண்டு இருந்தார். அப்போது ஆஜர் எதிரிகள் 4 பேரும் அங்கு வந்து என் மகன் செந்தில் குமாரை ஏன்ட தெவிடியா பையா ஏர் ஓட்டுவது நியாயமா என்று அசிங்கமாக பேசினார்கள். அப்போது 3ம் எதிரி அருள் என்பவர் இரும்பு ராடால் என் மகனின் வலது பக்க இடுப்பின் மீது அடித்துவிட்டார். 4ம் எதிரி செல்வம் கல்லால் நெற்றியில் அடித்துவிட்டார். 2ம் எதிரி சிவசக்தி என்பவர் மூங்கில் தடியால் என் மகனை இடுப்பிற்கு மேல் பக்கத்திலும் அடித்துவிட்டார். 1ம் எதிரி ராஜவேல் கையால் என் மகனை கன்னத்தில் அடித்துவிட்டார். மேலும் 4 எதிரிகளும் எனது மகனை மாறி மாறி அடித்தார்கள். 3ம் எதிரி அருள் என் மகனின் உயிர்நாடியை கையில் பிடித்து பிழிந்தார். நான் ஓடிச்சென்று சண்டையை விலக்கினேன். அப்போது 3ம் மற்றும் 4 எதிரிகள் கையால் என் இடது காதில் அடித்துவிட்டார்கள். என் இடது பக்க காது கேட்காமல் போய்விட்டது. என் மகனை எதிரிகள் தாக்க பயன்படுத்திய கம்பி, கொம்பு , கல் ஆகியவற்றை பார்த்தால் அடையாளம் காட்டி சொல்ல முடியும் தற்போது நீதிமன்றத்தில் உள்ள கம்பி, கொம்பு , கல் ஆகியவற்றால் தான் எதிரிகள் என் மகனை தாக்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் உள்ள கைப்பேசி

என் மகனுடையதாகும். அதனை 3ம் எதிரி அருள் என் மகனிடம் இருந்து எடுத்து கீழே போட்டு உடைத்துவிட்டார். மேலும் எங்களுக்கு சொந்தமான எக்சல் இருசக்கர வாகனத்தை எதிரிகள் நால்வரும் சேர்ந்து கை, கம்பி, தடி ஆகியவற்றால் தாக்கி வண்டியின் கண்ணாடி ,சீட்டு மற்றும் சில பாகங்களை சேதப்படுத்திவிட்டார்கள். காயமடைந்த நானும் என் மகனும் செங்கம் அரசு ம.ம சிகிச்சைக்காக சேர்ந்தோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக தி.மலை அரசு சேர்ந்தோம். அங்கு சுமார் 1 வார காலம் சிகிச்சையில் இருந்தோம். என் மகன் சிகிச்சை பெற்றுவிட்டு பின்னர் வந்து செங்கம் கா.நி எதிரிகள் மீது புகார் கொடுத்தார். காவலர்கள் என்னை விசாரித்தார்கள்..

**கு.வி-**

ஆஜர் எதிரிகள் நால்வரையும் நன்கு தெரியும். அவர்கள் என்னுடைய உறவினர்கள் அல்ல. எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்பந்தமாக பிரச்சணை உள்ளது. எங்களது நிலத்திற்கு அருகில் எதிரிகளின் நிலம் உள்ளது. செங்கம் - தி.மலை தார் சாலையில் சாலையை ஒட்டி தென்புறமாக எங்களது நிலம் அமைந்துள்ளது என்றால் சரிதான். எங்களது நிலத்தை ஒட்டி மேல்புறத்தில் லோகநாதன் நிலம் உள்ளது. அதற்கும் மேல்புறத்தில் எதிரிகளின் நிலங்கள் அமைந்துள்ளது. எதிரிகளின் நிலம் எங்களது நிலத்தை ஒட்டி இல்லை என்றால் தென்புறத்தில் எதிரிகளின் நிலம் எங்களது நிலத்தை ஒட்டி உள்ளது. மேல்புறத்தில் எங்களது நிலத்தை ஒட்டி அவர்களது நிலம் அமையவில்லை. எனது நிலத்திற்கு தென்புறமாக எதிரிகளின் நிலம் இல்லை என்றாலும் லோகநாதன் மற்றும் பச்சையப்பனின் நிலம் தான் அமைந்துள்ளது என்றாலும் சரியல்ல. எங்களுக்கும் லோகநாதன் மற்றும் பச்சையப்பன் ஆகியோருக்கு தான் பிரச்சணை ஏற்பட்டது என்றாலும் எதிரிகளுக்கு மேற்படி சண்டையில் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி சண்டையின் போது 1ம் எதிரியின் மனைவி ஜானகி என்பவர் இடையே செல்லும் போது அவரை நான் கல்லால் தாக்கி அதன் பேரில் அவர் என் மீது புகார் அளித்தார் என்றால் நான் 1ம் எதிரியின் மனைவியை தாக்கவில்லை அவர் எங்கள் மீது பொய் புகார் அளித்தார். மேற்படி பொய் வழக்கில் என்னை காவலர்கள் கைது செய்தார்கள். 1ம் எதிரியை பழிவாங்க வேண்டி எனது மகனை வைத்து பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் பொருளானது கம்பியா அல்லது ராடா என்றால் இது கம்பியாகும். நான் சொல்வது போல் 3ம் எதிரி அருள் கம்பியை வைத்து என் மகனை தாக்கவில்லை என்றால் சரியல்ல. தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கொம்பினால் 2 மற்றும் 3 எதிரிகள் என் மகனை தாக்கவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் அடித்ததில் என் மகன் கை உடைந்துவிட்டது. நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எங்களது நிலத்திற்கு அருகே சாலையை அகலப்படுத்த வேண்டி கற்கள் கொட்டப்பட்டு இருந்தது என்றாலும் அதில் 2 கற்களை காவலர்களிடம் கொடுத்து எதிரிகள் என்

மகனை தாக்கியதாக பொய் உரைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் உள்ள கற்களால் தான் எதிரிகள் என் மகனை தாக்கினார்கள். நான் சொல்வது போல் எதிரிகள் கருங்கல்லை கொண்டு தாக்கி இருந்தால் என் மகனுக்கு வெட்டுகாயம் மற்றும் ரத்த காயம் ஏற்பட்டு இருக்கும் என்றால் அவருக்கு ரத்த காயம் ஏற்பட்டு அதன் காரணமாக தான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார்.

2. செங்கம் அரசு ம.ம ஒரு நாள் சிகிச்சையில் எனது மகன் இருந்தார். காவலர்கள் என் மகனிடம் வந்து வாக்குமூலம் பெற்றுசென்றார்கள். நான் சொல்வது போல் என் மகனுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும் அதனால் தான் காவலர்கள் என் மகனிடம் புகார் வாக்குமூலம் பெற்று செல்ல வில்லை என்றாலும் சரியல்ல. என் மகனுக்கு காயம் ஏற்படாத காரத்தினால் தான் செங்கம் அரசு ம.ம இருந்து டிஸ்சார்ஜ் செய்து மருத்துவர்கள் அனுப்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. மேல் சிகிச்சைக்காக என் மகனை தி.மலை அனுப்பி வைத்தார்கள். அங்கு அவர் 1 வார காலம் சிகிச்சையில் இருந்தார். நான் சொல்வது போல் என் மகன் எந்த அரசு ம.ம சிகிச்சையில் இல்லை என்றால் சரியல்ல.

3. என்னை 2ம் எதிரி சிவசக்தி மற்றும் 4ம் எதிரி செல்வம் ஆகியோர்கள் தாக்கினார்கள். நான் சொல்வது போல் எதிரிகள் என்னை அடித்து இருந்தால் எனக்கு காயம் ஏற்பட்டு இருக்கும் என்றாலும் ஆனால் எனக்கு எந்த காயமும் ஏற்படாத காரணத்தினால் தான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேரவில்லை என்றால் சரியல்ல. 3ம் எதிரி என் மகனின் உயிர்நாடியை பிடித்து அழுத்தவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் இருசக்கர வாகனத்தில் சென்றபோது எங்களது நிலத்திற்கு அருகே எடுக்கப்பட்டுள்ள பள்ளத்தில் அவரே தானாக விழுந்து அதன்விளைவாக அவருக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் அதனை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றாலும் எதிரிகள் எங்கள் மீது தாக்கல் செய்துள்ள வழக்கில் இருந்து தப்பிக்க வேண்டி அவர்கள் மீது பொய் புகார் அளித்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

4. நான் சொல்வது போல் எதிரிகள் எங்களை ஆபாசமாக பேசி கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**ஒம்/-(பி.வித்யா)**
**நீதித்துறை நடுவர், செங்கம்.**